மேலும், சென்னை பெருநகர காவல்துறையின் இந்த ரௌடிகள் வேட்டை தொடர்ந்து நடைபெறும் என்பதால், சட்டம், ஒழுங்குக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலோ குற்றச் செயல்களிலோ ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கமிஷனர் அமல்ராஜ் எச்சரித்துள்ளார்.

குடி போதையில் தகராறு: காசிமேட்டில் ரவுடி கொலை

சென்னை, நவ. 11–

காசிமேட்டில் மது அருந்திய போது நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் ரவுடி கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை காசிமேடு, சிங்காரவேலன் நகரைச் சேர்ந்தவர் தீபத் என்ற சளி தீபத் (வயது 29). இவர் மீது காசிமேடு உள்ளிட்ட காவல் நிலையங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேலும், இவர் சி பிரிவு சரித்திர பதிவேடு குற்றவாளியாகவும் உள்ளார். கடந்த மாதம் தீபத் தனது நண்பர்களான ஜெயசீலன், சுராஜ், கண்ணன், தேசப்பன் ஆகியோருடன் எல்லையம்மன் கோயில் அருகே அமர்ந்து மது அருந்தியுள்ளார். அப்போது தீபத்துக்கும், ஜெயசீலனுக்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த தீபத், தான் வைத்திருந்த மது பாட்டிலால் ஜெயசீலனின் தலையில் தாக்கியுள்ளார். இதையடுத்து அங்கிருந்த மற்ற நண்பர்கள், இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தால் இருவருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், நேற்று மாலை காசிமேடு, மீனவர் சங்க ஐக்கிய சபையின் பின்புறம் தீபத் தனது நண்பர்களான ஜெயசீலன் மற்றும் அவரது மைத்துனன் ஜெயச்சந்திரன், சுதாகர் மற்றும் சிவா ஆகியோருடன் அமர்ந்து மது அருந்தியுள்ளார். அப்போது, நண்பர்களுக்குள் ஏற்பட்ட வாய்த்தகராறு காரணமாக திடீரென ஆத்திரமடைந்த ஜெயசீலனின் மைத்துனன் ஜெயச்சந்திரன், தான் வைத்திருந்த கத்தியால் தீபத்தை சரமாரியாகத் தாக்கியுள்ளார். இதனால் பலத்த காயமடைந்த தீபத் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். பின்னர், உயிரிழந்த தீபத்தின் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனிடையே, உயிரிழந்த தீபத்தின் மனைவி கலையரசி அளித்த புகாரின் அடிப்படையில், மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய காவல்துறையினர் கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த கொலை சம்பவத்தில் தொடர்புடைய ஜெயசீலன் மற்றும் ஜெயச்சந்திரன் ஆகிய இருவரையும் காவல்துறையினர் கைது செய்து அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அசாமில் எக்ஸ்பிரஸ் ரெயிலின் 6 பெட்டிகள் தடம்புரண்டு விபத்து: பயணிகள் காயம்

கவுகாத்தி, நவ. 11–

அசாம் மாநிலத்தில் எக்ஸ்பிரஸ் ரெயிலின் 6 பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்குள்ளான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் பல பயணிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது.



மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தாவில் உள்ள சித்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து மிசோரம் மாநிலம் சைராங் நோக்கி கொல்கத்தா – சைராங் எக்ஸ்பிரஸ் ரெயில் (ரெயில் எண்.13125) சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் இன்று காலை சுமார் 7 மணியளவில் அசாம் மாநிலம் கவுகாத்தி அருகே உள்ள டிகாரு ரெயில் நிலையம் வந்தது. அப்போது ரெயிலை நிறுத்த முயன்றபோது, ரெயில் லோகோ பைலட்டின் கட்டுப்பாட்டை இழந்தது. இதையடுத்து என்ஜின் உட்பட 6 பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பயணிகள் பலர் காயமடைந்தனர். நல்வாய்ப்பாக எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இதுகுறித்து தகவல் அறிந்த ரெயில்வே அதிகாரிகள் மற்றும் மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அந்த பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

வடகிழக்கு எல்லை ரெயில்வே தகவலின்படி, பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்; யாருக்கும் பெரும் காயம் ஏற்படவில்லை. சிலருக்கு மட்டுமே சிறிய அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. பயணிகள் மாற்று ரெயில் மூலம் தங்கள் ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மீட்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. ரெயில் தடம் புரண்டதற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. விபத்து தொடர்பாக ரெயில்வே அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்புப்பணிகளைமேற்கொள்ளவும், தண்டவாளத்தைச் சீரமைக்கவும் மீட்பு ரெயில் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ரெயில் தடம் புரள்வதற்குச் சற்று முன்பு, அதன் என்ஜினுக்குள் பதிவு செய்யப்பட்ட காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. அந்தப் பதிவில் ரெயிலின் பிரேக் அமைப்பு சரியாகச் செயல்படவில்லை என்று ஓட்டுநர் கூறுவது இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

வில்லிவாக்கத்தில் டேங்கர் லாரி மோதி ஒருவர் பலி

சென்னை, நவ. 11–

சென்னை வில்லிவாக்கம் பகுதியில் இன்று காலை கட்டுப்பாட்டை இழந்த டேங்கர் லாரி சாலையோரம் நின்றவர்கள் மீது மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சென்னை வில்லிவாக்கம் வழியாக இன்று காலை சென்று கொண்டிருந்த டேங்கர் லாரி ஒன்று, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நின்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது பயங்கரமாக மோதி விபத்து ஏற்பட்டது. இந்த கோர விபத்தில் சிக்கிய அன்பழகன் என்பவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும், இந்த விபத்தில் படுகாயமடைந்த 3 பேரை அங்கிருந்த பொதுமக்கள் மீட்டு அருகிலுள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், உயிரிழந்த அன்பழகனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். விபத்தை ஏற்படுத்திய டேங்கர் லாரி ஓட்டுநர் அஜித்குமாரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேகதாது அணை விவகாரம்; வேடிக்கை பார்க்கும் விஜய்: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, நவ.11–

'மேகதாதுவில் காவிரியின் குறுக்கே அணை கட்ட யாருடைய அனுமதியும் தேவையில்லை' என்று கூறியுள்ள கர்நாடக மாநில முதலமைச்சருக்கு பதில் அளிக்காமல் வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசின் முதலமைச்சர் விஜய்யின் வாடகைக் கால் கூட்டணி அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட புரட்சித் தலைவர்,

புரட்சித் தலைவி அம்மா, தொடர்ந்து அம்மாவின் அரசு உச்சநீதிமன்றத்தில் பல சட்டப்போராட்டங்களை நடத்தியது. அதன் விளைவாக, அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த உச்சநீதிமன்றம் காவிரி பிரச்சனையில் தனது இறுதித் தீர்ப்பினை வழங்கியது.

அதன்படி, காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு அமைக்கப்பட்டு, கர்நாடக அரசு காவிரியில் இருந்து ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிற்கு உரிய பங்கு நீரை திறந்துவிடும் அளவையும் வெளியிட்டது.

மேலும்,

★ 'பன்மாநில நதிகள் தேசிய சொத்து. எந்த ஒரு மாநிலமும் தனி உரிமை கோர இயலாது' என்ற நவம்பர், 1991–ம் ஆண்டைய உச்ச நீதிமன்றத்தின் கருத்து, இத்தீர்ப்பில் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

★ உச்சநீதிமன்றம் அனைத்து மாநிலங்களின் வாதங்களையும் முழுமையாகக் கேட்டறிந்த பின்னர், கீழ்படுகை மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் மேல்படுகை மாநிலங்கள் எவ்விதக் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என தெளிவான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்நிலையில், கர்நாடக மேகதாதுவில் அணை கட்ட முயற்சிப்பதைக் கண்டித்து, 'கர்நாடக அரசு மேகதாது திட்டத்தை செயல்படுத்தக் கூடாது' என்ற நமது நிலைப்பாட்டை உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னரும், பின்னரும் 25.2.2017, 27.2.2017, 4.9.2018, 8.10.2018 மற்றும் 22.11.2018 ஆகிய நாட்களில் பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் மூலமாகவும், நேரடியாக சந்தித்தும், மேகதாது அணை கட்டுவதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கக் கூடாது என தொடர்ந்து வலியுறுத்தினேன்.

பொய் சொல்லும் கர்னாடக முதல்வர்

இந்நிலையில், கர்நாடக முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் 'மேகதாதுவில் அணை கட்ட யாருடைய அனுமதியும் தேவையில்லை' என்று கூறியதாக, நாளிதழ் மற்றும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காவிரி மேலாண்மை ஆணையம் கடந்த 6 மாத காலமாக காவிரியில் நமக்குரிய பங்கு நீரைத் திறந்துவிட உத்தரவிட்ட பிறகும், கர்நாடக அரசு தொடர்ந்து அதனை நிறைவேற்றாததுடன், தமிழ் நாட்டில் உள்ள டெல்டா மாவட்டங்களை பாலைவனமாக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் மேகதாதுவில் அணை கட்ட யாருடைய அனுமதியும் தேவையில்லை என்றும்;

இதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துவிட்டதாக கர்நாடக முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் உண்மைக்கு மாறான தகவலை பரப்பி தமிழக மக்களிடையே பீதியை கிளப்பி வருகிறார்.

ஒரே பொய்யை திரும்பத் திரும்பச் சொல்லி அதை உண்மையாக்கிவிடலாம் என்ற தத்துவத்தை கடைபிடிக்கும் கர்நாடக முதலமைச்சருக்கு பதில் அளிக்க வக்கில்லாமல் வாய்மூடி மவுன சாமியாராக, தமிழ் நாட்டின் உரிமைகளைக் காக்காமல் இருக்கும் வாடகைக் கால் கூட்டணி அரசின் முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் செயல் கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பெயர் மாற்றம்

Old Surname:VAZHAPPULLY Old Given Name:JOSEPH JUSTIN DAVIS, S/O: V J DAVIS, பிறந்த தேதி: 16/12/1984, பிறந்த ஊர்: CHENNAI, Address: PLOT NO : 1, SIVA SAKTHI COLONY, VILLIVAKKAM, CHENNAI – 600049, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Given Name: JOSEPH JUSTIN DAVIS என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: VAZHAPPULLY
Old Given Name: JOSEPH JUSTIN DAVIS

பெயர் மாற்றம்

Old Name : KAUSAR JAAN, கணவர் பெயர்: Muhamad Wasim Rather, பிறந்த தேதி: 05.06.1984, ADDRESS: No. 290/1/1, 1st Floor, TVK Road, Royapettah High Road, Chennai –600014. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New NAME: QUANSAR JAN என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name : KAUSAR JAAN

பெயர் மாற்றம்

OLD NAME : PASUPATHI VENKATESAN, தந்தை பெயர்: VENKATESAN, பிறந்த தேதி: 05/08/1998, ADDRESS: NO.173/37, ASHOKA NAGAR, ARUMBAKKAM, CHENNAI – 600106. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி NEW NAME: PASUPATHY VENKATESAN என்று அழைக்கப்படுகிறேன்.

OLD NAME : PASUPATHI VENKATESAN

பெயர் மாற்றம்

Old Surname:HEROJI RAO ASHOK Old Given Name:CHANDRA, W/O:ASHOK HEROJI RAO, பிறந்த தேதி: 22/07/1968, பிறந்த ஊர்: CHENNAI, Address: PLOT NO.6, THULASI ILLAM, NETHAJI NAGAR 2ND ST, KRISHNA NAGAR ANNEX, MADURAVOYAL, CHENNAI – 600095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Surname:ASHOK HEROJI RAO New Given Name:CHANDRA என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: HEROJI RAO ASHOK
Old Given Name: CHANDRA

பெயர் மாற்றம்

BATUL SHABBIR, கணவர் பெயர்: HAKIM, பிறந்த தேதி: 03/10/1989, பிறந்த ஊர்: Chennai, Address: 13/25 Mooker Nallamuthu Street Chennai – 600001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி BATUL HAKIMUDDIN MITHAIWALA என்று அழைக்கப்படுகிறேன்.

BATUL SHABBIR

பெயர் மாற்றம்

SANGEETHA MANIKANDAN, கணவர் பெயர் : MANIKANDAN, பிறந்த தேதி: 25/01/1982, பிறந்த ஊர்: Aranvayal, Address: Plot No. 14A H. NO. 9/54 SRI DEVI GARDENS KACERI NAGAR MOWLIVAKKAM CHENNAI – 600116, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி SANGEETHA KUPPURAJ என்று அழைக்கப்படுகிறேன்.

SANGEETHA MANIKANDAN

பெயர் மாற்றம்

OLD GIVEN NAME: GOPALKARUPPU SWAMY MANICKAM, தந்தை பெயர்: MANICKAM, பிறந்த தேதி: 18.10.1974, ADDRESS: NO. 92, S1, VGN PLATINA AMBIGAI NAGAR, AYAPAKKAM, CHENNAI– 600077. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி NEW SURNAME: MANICKAM NEW GIVEN NAME : GOPAL KARUPPASWAMY என்று அழைக்கப்படுகிறேன்.

OLD GIVEN NAME: GOPALKARUPPU SWAMY MANICKAM

பெயர் மாற்றம்

DARVESH AKHTAR, தந்தை பெயர்: Zahir Hussain, பிறந்த தேதி: 10/06/1996, பிறந்த ஊர்: Madurai, Address: 3/38 MIG I 3RD Block, New TNHB 1500 Flats, Sholinganallur, Chennai – 600119, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி DARVESH AKHTAR ZAHIR HUSSAIN என்று அழைக்கப்படுகிறேன்.

DARVESH AKHTAR

பெயர் மாற்றம்

Old Name : MOHAMMAD WASEEM RATHER, தந்தை பெயர்: Bashir Ahmed Rather, பிறந்த தேதி: 02.03.1983, ADDRESS: No. 290/1/1, 1st Floor, TVK Road, Royapettah High Road, Chennai –600014. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New NAME: MUHAMAD WASIM RATHER என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name : MOHAMMAD WASEEM RATHER

பெயர் மாற்றம்

Old Name: Ravikrishna Raja Iyer, தந்தை பெயர்: Venkatraman Nataraja Iyer, பிறந்த தேதி: 13.12.1979, Address: Flat NO.B–002, Kesava Dugar Apartments, East Avenue, Greenways Road, Kesava Perumalpuram, Raja Annamalai Puram, Chennai – 600028. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Name: RAVIKRISHNA IYER என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name: Ravikrishna Raja Iyer

பெயர் மாற்றம்

Old Surname: SYED KAREEMUDDIN AHMED Old Given Name: MISBAH MIDHAT SYEDA, தந்தை பெயர் : SYED KAREEMUDDIN AHMED, பிறந்த தேதி: 30/05/1996, பிறந்த ஊர்: CHENNAI, TAMIL NADU, Address: DOOR.NO.107, SURESH BLOCK, CHOOLAIMEDU HIGH ROAD, CHENNAI - 600094., என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Surname: SYEDA New Given Name: MISBAH MIDHAT என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: SYED KAREEMUDDIN AHMED
Old Given Name: MISBAH MIDHAT SYEDA

பெயர் மாற்றம்

Old Given Name: ABDUL RAHIMAN Old Sur Name: MAHABOOB BASHA, பிறந்த தேதி: 25/09/1966, ADDRESS: NO. 1 FIRST FLOOR, AYAAN CITY PHASE 2, LLELAVATHI NAGAR, SENEERKUPPAM, CHENNAI –600056, TAMILNADU. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Given Name: ABDUL RAHAMAN New Sur Name: MAHABOOB BASHA என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: ABDUL RAHIMAN
Old Sur Name: MAHABOOB BASHA

II வது சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை

MCOP 4345 of 2022

M.Sundari D/O. Moorthy ...Petitioner

Vs

1. S.Vaishali
2. Reliance General Insurance Ltd.
3. M.Gnanavel (a) Vel ...Respondent

To:
M.Gnanavel (a) Vel, S/o Moorthy,
Door No. 1/222, Main Road,
Ramanatham 606303, Thittakudi (TK)
Cuddalore Dist.,

இதன் மூலம் அறிவது என்னவென்றால் மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றம் முன்பு தாங்கள் வருகைக்காக 30/11/2026 அன்று போடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ வரும் 30.11.2026 அன்று காலை 10.30 மணி அளவில் ஆஜர் ஆக வேண்டும். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

T.SATHISH
Counsel for Petitioner

பெயர் மாற்றம்

Old Name: SARASWATHY NARAYANAN, கணவர் பெயர்: NARAYANAN, பிறந்த தேதி: 25.10.1955, Address: 94/61, Bangaru Street, Mount Road, Chennai –600002. Tamilnadu, India. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Name: SARASWATHI NARAYANAN என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name: SARASWATHY NARAYANAN

பெயர் மாற்றம்

ABDUL RAGHIM, தந்தை பெயர்: MOHAMAD AMEEN, பிறந்த தேதி: 15/04/1962, பிறந்த ஊர்: ARNI, NO. 18C/4A, PRAKASH NAGAR, BHARATHIYAR STREET, ARNI, TIRUVANNAMALAI DISTRICT, TAMILNADU – 632301, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி ABDHUL RAHEEM MOHAMAD AMEEN என்று அழைக்கப்படுகிறேன்.

ABDUL RAGHIM

பெயர் மாற்றம்

Old Surname: VASUDEVAIAH Old Given Name: BABU, தந்தை பெயர் : VASUDEVAIAH, பிறந்த தேதி: 16/08/1960, பிறந்த ஊர்: CHENNAI, Address: NO.14, KRISHNA NAGAR MAIN ROAD, JAWAHAR NAGAR, CHENNAI – 600082, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Surname: VASUDEVA PILLAI New Given Name: BABU என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: VASUDEVAIAH
Old Given Name: BABU

பெயர் மாற்றம்

Old Name : VINODHINI SELVAKUMAR LAKSHMI, தந்தை பெயர்: SELVAKUMAR, பிறந்த தேதி: 07/04/2001, ADDRESS: NO.4/78, 12TH STREET, MGR NAGAR, OMR, KOTTIVAKKAM, CHENNAI – 600041. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி NEW NAME: VINODHINI SELVAKUMAR என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name : VINODHINI SELVAKUMAR LAKSHMI

பெயர் மாற்றம்

SHABANA BANU M, கணவர் பெயர்: MUSHTAQ AHMED, பிறந்த தேதி: 03.10.1984, Address: Old No. 13, New No. 29, Muktharunissa Begum Street, Ellis Road, Anna Salai, Chennai – 600002. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி SHABANA M. என்று அழைக்கப்படுகிறேன்.

SHABANA BANU M.

பெயர் மாற்றம்

Old Name: Julius Gorla, தந்தை பெயர்: Lourdusamy, பிறந்த தேதி: 01.07.1950, No.6/4, Angalamman Koil Street, D K Naidu Nagar, Sriperumbudur, Kanchipuram District-602105 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Name: JULIUS LOURDUSAMY Given Name: JULIUS Sur Name: LOURDUSAMY and henceforth Shall be known as JULIUS LOURDUSAMY என்று அழைக்கப் படுகிறேன்.

Old Name: Julius Gorla

பெயர் மாற்றம்

Old Name: SAI SKANDHAN SANKARA NARAYANA SHARMA, தந்தை பெயர்: Sankara Narayana Sharma, பிறந்த தேதி: 30.08.2008, Address: New No. 48, Old No.24, Chakrapani Street, West Mambalam, Chennai, Pincode – 600033, Tamilnadu, India. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Name: SAI SKANDHAN என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name: SAI SKANDHAN SANKARA NARAYANA SHARMA

பெயர் மாற்றம்

Old Name : SANTHAKUMAR, தந்தை பெயர்: MANIVANNAN, பிறந்த தேதி: 04.04.1965, Address: No.24, G5, Raj Castle, Azeez Nagar 1st Street, Kodambakkam, Chennai – 600024. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி NEW NAME: KANI KANNAN SANTHA KUMAR என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name : SANTHAKUMAR

பெயர் மாற்றம்

Old Surname:KRISHNA KUMAR, Old Given Name: DHANUJA, கணவர் பெயர்: Senthilvel, பிறந்த தேதி: 27.06.1972, ADDRESS: NO. F-3, YATHAVAL STREET, FOMRA CELEBRATIONS, RAJANKUPPAM, VANAGARAM, AVADI – 600095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி New Sur Name: SENTHILVEL New Given Name: DHANUJA என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: KRISHNA KUMAR,
Old Given Name: DHANUJA

பெயர் மாற்றம்

SABEENA FERNANDEZ (ALISE) SUJITHA, கணவர் பெயர்: ROY VICTOR, பிறந்த தேதி: 06/09/1972, பிறந்த ஊர்: ERNAKULAM, KERALA, ADDRESS: 8A/TF, BLOCK –C, VASANTH APARTMENTS, 10 M S M STREET, PERAMBUR, CHENNAI – 600011, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி SUJA ROY என்று அழைக்கப்படுகிறேன்.

SABEENA FERNANDEZ (ALISE) SUJITHA

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிபதி நீதிமன்றம் செங்கல்பட்டு
இடைக்கால மனு எண்: 6/2026
இன்
அசல் வழக்கு எண்: 48 / 2019

சாந்தி க/பெ. முரளிகிருஷ்ணன்
எண்: 2/28, சுசீலா நகர்,
கேளம்பாக்கம்,திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்,
மனுதாரர்/வாதி

எதிர்

மகாலட்சுமி
க/பெ ராமலிங்கம் ரெட்டியார்,
விளங்கல்பட்டு கிராமம், வானமாதேவி அஞ்சல்,
கடலூர் வட்டம் & மாவட்டம்.
எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

வாதி தங்களுக்கு எதிராக அடமான சொத்ததை மீட்க மேற்கண்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்: 48/2019–ன் மூலம் வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கின் நீதிமன்ற உத்தரவின் பேரில் ரூ.8,73,215/ னை செலுத்த வேண்டி மனுதாரருக்கு "lodgment schedule" வழங்க வேண்டிய காலதாமத்தினை ஏற்கவேண்டி ஒரு இடைக்கால மனு எண்: 6/2026 இன் அசல் வழக்கு எண்: 48/2019–ன் முதல் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் மீதான விசாரணை 16.11.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளன. அது சம்மந்தமாக தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் அன்றைய தினம் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு தங்கள் ஆஜராகி ஆட்சேபணையினை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் மனு ஒரு தலைப்பசமாக உத்திரவாகும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீ. சந்திரன் பி.ஏ., பி.எல்.,
மனுதாரர் / வாதியின்
வழக்கறிஞர், செங்கல்பட்டு

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிபதி நீதிமன்றம் செங்கல்பட்டு
இடைக்கால மனு எண்:7/2026
இன்
அசல் வழக்கு எண்: 48 / 2019

சாந்தி க/பெ. முரளிகிருஷ்ணன்
எண்: 2/28, சுசீலா நகர்,
கேளம்பாக்கம்,திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்,
மனுதாரர்/வாதி

எதிர்

மகாலட்சுமி
க/பெ ராமலிங்கம் ரெட்டியார்,
விளங்கல்பட்டு கிராமம், வானமாதேவி அஞ்சல்,
கடலூர் வட்டம் & மாவட்டம்.
எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

வாதி தங்களுக்கு எதிராக அடமான சொத்ததை மீட்க மேற்கண்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்: 48/2019–ன் மூலம் வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கின் நீதிமன்ற உத்தரவின் பேரில் ரூ.8,73,215/ னை செலுத்த வேண்டி மனுதாரருக்கு "lodgment schedule" வழங்க வேண்டிய ஒரு இடைக்கால மனு எண்: 7/2026 இன் அசல் வழக்கு எண்: 48/2019–ன் முதல் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் மீதான விசாரணை 16.11.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளன. அது சம்மந்தமாக தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் அன்றைய தினம் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு தங்கள் ஆஜராகி ஆட்சேபணையினை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் மனு ஒரு தலைப்பசமாக உத்திரவாகும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீ. சந்திரன் பி.ஏ., பி.எல்.,
மனுதாரர் / வாதியின்
வழக்கறிஞர், செங்கல்பட்டு

டைனாவிஷன் லிமிடெட்

CIN: L31100TN1973PLC006439
பதிவு அலுவலகம்: "அபெக்ஸ் பிளாசா" 5–வது தளம்,
எண். 3, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை–600 034 போன்: 044-28263651.
E-mail: dvl@dynavision.in Website : www.dynavision.in

30-09-2026 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு

நவம்பர் 10, 2026 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர் குழு கூட்டத்தில் செப்டம்பர் 30, 2026 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிறுவனத்தின் (தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த) தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை அங்கீகரித்தது.இந்த முடிவுகள், சட்டபூர்வ தணிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையுடன் சேர்த்து, நிறுவனத்தின் www.dynavision.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இவற்றை அணுகலாம். இணைப்பு https://www.dynavision.in/images/Financial%20Result/financial%20results%2030.09.2026.pdf

இடம் : சென்னை
தேதி : 10–11–2026

டைனாவிஷன் லிமிடெட்(க்காக)
சுலீலால் வா
நிர்வாக இயக்குநர்
DIN: 10711642

குறிப்பு: இந்த விளம்பரம் 2015–ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33 மற்றும் 47 (1) இணங்க வழங்கப்படுகிறது.

சேலம் மாவட்ட காவல்துறை (EOW) அறிவிப்பு

HAPPY HOMES's SIGARAM CHARITABLE TRUST & ANNAI KASTHURIBHAI SAMUGA SEVAI SANGAM

கடந்த 28.02.2026–ந் தேதி சுமார் 15.30 மணியளவில் சேலம் பொருளாதார குற்றப்பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.S.சரண்யா அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சேலம் புதிய பஸ் நிலையம் எதிரில் L.I.C colony–யில் உள்ள வசந்தம் ஹோட்டலின் கூட்ட அரங்கில் HAPPY HOMES, அன்னை கஸ்தூரிபாய் சேவை சங்கம், சிகரம் சேரிட்டபுல் டிரஸ்ட் மற்றும் Vazhkaiyin Matrathin Venture Private. Ltd. என்ற பயனாளிகளின் இலவச நலத்திட்ட விளக்கவுரை நிகழ்ச்சி என்று Flex Banner–ல் அச்சிட்டு வைக்கப்பட்டிருந்ததாகவும், அது பற்றி அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது அன்னை கஸ்தூரிபாய் சேவை சங்கத்தின் நிறுவனர் அருண்பால் (எ) ராஜபாண்டி என்பவரது தலைமையில் கஜேந்திரன் சுரேஷ் வேதாசலம் மற்றும் செந்தில் குமார் ஆகியவர்கள் மேடையில் நின்று கொண்டு அன்னை கஸ்தூரிபாய் சேவை சங்கம் சிகரம் சேரிட்டபுல் டிரஸ்ட் மூலம் HAPPY HOMES, என்ற பெயரில் கலந்தாய்வு கூட்டம் நடத்திக் கொண்டிருப்பதாகவும், அந்த கூட்டத்தில் 70–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒன்று கூடி இருந்ததாகவும், அவர்களிடம் தங்களது நிறுவனத்தில் ரூ.50,000/– பணம் செலுத்தி உறுப்பினராக சேர்ந்து கொண்டால் 15 வருடங்களில் மாதா மாதம் ரூ.1,200/– மற்றும் 5 கிலோ அரிசியுடன் சில மளிகைபொருட்கள் தருவதாக சொல்லி Unregulated Deposits வசூல் செய்வது சம்மந்தமாக பொதுமக்களிடமிருந்து சட்டத்திற்கு முரணாக பல கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து ஆசை வார்த்தைகளை பணம் முதலீடு செய்ய செய்ய கவர்ச்சிகரமான பல திட்டங்களை கூறியுள்ளதால் அந்த திட்டங்களில் பொதுமக்கள் முதலீடு செய்தால் அவர்கள் ஏமாற்றப்படுவார்கள் என்பதால் மேற்கண்ட நபர்கள் மீது நடவடிக்கை வேண்டி காவல் உதவி ஆய்வாளர் திருமதி.S.சரண்யா அவர்கள் கொடுத்த தனி அறிக்கையினை பெற்று சேலம் பொருளாதார குற்றப்பிரிவு குற்ற எண். 02/2026 u/s111(3) BNS – 2023 & 3, 5, 21(1), 23 BUDS Act –2019ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு கடந்த 01.03.2026–ந் தேதி எதிரிகள் A1.கஜேந்திரன் 60 த/பெ கண்ணன், A2.அருண்பால் (எ) ராஜபாண்டி த/பெ.கருப்பசாமி, A3.சுரேஷ் த/பெ பாபு, A4.வேதாசலம் த/பெ முனுசாமி A5.செந்தில் குமார் த/பெ ராமசாமி ஆகியோர்களை கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனங்களில் பணம் முதலீடு செய்து ஏமாற்றப்பட்ட பொதுமக்கள் சம்மந்தப்பட்ட அனைத்து அசல் ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டையுடன் சேலம் பொருளாதாரக் குற்றப்பிரிவு அலுவலகத்தில் புகார் கொடுக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

காவல் ஆய்வாளர்,
பொருளாதார குற்றப்பிரிவு,
சேலம்.

அலுவலக முகவரி:
காவல் துணை கண்காணிப்பாளர்
340–பஞ்சவர்ண நகர்,
பேர்லேண்ட்ஸ்,
சேலம் – 16.

பொது அறிவிப்பு

இதன் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால் எனது கட்சிக்காரர் திரு.H.ரவிசங்கர் த/பெ. திரு.V.ஹரிஹரன் அவர்களின் ஜெனரல் பவர் ஏஜென்ட் M/s. விஷ்ணு பவுன்டேஷன், rep by its one of the partner திரு. சதாசிவம் கமல்ராஜ், (ஜெனரல் பவர் பத்திர எண்.4212/2026, 30.03.2026, சேலையூர் சார்பதிவாளர் அலுவலகம்) ஆகிய இவர்களுக்கு சொந்தமான கதவு எண்.1, மாடம்பாக்கம் கிராமம், மனை எண்.124ர்க்கு, சர்வே எண்.749/2ல் அமைந்துள்ள தளம் போட்ட வீடு உள்ளது.

மேற்படி மேலே குறிப்பிட்டுள்ள வீட்டின் அசல் தாய் பத்திரங்களை கடந்த சில நாட்களுக்கு முன்பு எனது கட்சிக்காரர் திரு.H.ரவிசங்கர் அவர்களின் ஜெனரல் பவர் ஏஜென்ட் M/s. விஷ்ணு பவுன்டேஷன், rep by its one of the partner திரு.சதாசிவம் கமல்ராஜ், அவர்கள் தாம்பரத்திலிருந்து, ராஜகீழ்ப்பாக்கம் செல்லும்போது தாம்பரத்தில் தொலைத்து விட்டார்.

விக்கிரய பத்திரம்	பத்திர எண்.3362/1982
விக்கிரய பத்திரம்	பத்திர எண்.2357/1983
ஜெனரல் பவர் பத்திரம்	பத்திர எண்.596/1987
விக்கிரய பத்திரம்	பத்திர எண்.4021/1988
விக்கிரய பத்திரம்	பத்திர எண்.6071/2002.

மேலும் மேலே குறிப்பிட்டுள்ள பத்திர எண்களின் அசல் தஸ்தாவேஜ்கள் யாரிடையேனும் இருந்தால் அதனை இந்த அறிவிப்பு கண்ட 15 நாட்களுக்குள் அதனை அதற்கு உரிய நபராகிய எனது கட்சிக்காரர் திரு. H. ரவிசங்கர் அவரிடமோ அல்லது அவருடைய ஜெனரல் பவர் ஏஜென்ட் M/s. விஷ்ணு பவுன்டேஷன், rep by its one of the partner திரு.சதாசிவம் கமல்ராஜ், அவர்களிடமோ ஒப்படைக்குமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் அசல் தஸ்தாவேஜ்கள் கிடைக்காத பட்சத்தில் எனது கட்சிக்காரர் திரு.H.ரவிசங்கர், மற்றும் அவர்களின் ஜெனரல் பவர் ஏஜென்ட் M/s. விஷ்ணு பவுன்டேஷன், rep by its one of the partner திரு. சதாசிவம் கமல்ராஜ், இந்த பொது அறிவிப்பை ஆதாரமாக வைத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் மேலே குறிப்பிட்டுள்ள பத்திர எண்களின் நகல் தஸ்தாவேஜ்களை பெற்றுக்கொண்டு அவருடைய சொத்தை விற்பனை செய்ய உரிமை உண்டு.

மேற்படி மேலே குறிப்பிட்டுள்ள பத்திர எண்களின் அசல் தஸ்தாவேஜ்களை வைத்து வேறு யாரேனும். எனது கட்சிக்காரர் திரு.H.ரவிசங்கர் அவர்களின் ஜெனரல் பவர் ஏஜென்ட் M/s. விஷ்ணு பவுன்டேஷன், rep by its one of the partner திரு.சதாசிவம் கமல்ராஜ் அவர்களுக்கு சொந்தமான வீட்டிற்கு உரிமைபாராட்டினாலோ அல்லது அவரின் சுயாதீனமின்றி கிரயம் செய்திருந்தாலோ அவையாவும் செல்லாது என்றும் எனது கட்சிக்காரர் திரு.H.ரவிசங்கர், மற்றும் அவர்களின் ஜெனரல் பவர் ஏஜென்ட் M/s. விஷ்ணு பவுன்டேஷன், rep by its one of the partner திரு. சதாசிவம் கமல்ராஜ், அவர்களே முழுக்க முழுக்க அந்த வீட்டின் உரிமையாளர் என்பதை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்து கொள்கிறோம்.

B. DORASWAMY NAIDU, B.A.BL, D.Tx.,
ADVOCATE & NOTARY PUBLIC
G.O.M.S. No.89/2018
BDN LAW ASSOCIATES
No.21A, Muthulinga Reddy Street, West Tambaram, Chennai–600 045
Mobile No.99403 03388

SHRIRAM FINANCE LIMITED

SALAVAKKAM BRANCH — VECHILE FOR SALE

S.NO.	VEH.NO	MAKE	MODEL	YEAR OF MODEL
1.	TN69AX-0166	CATERPILLAR	CAT 424 B2	2011
BRANCH MANAGER LOGESHWARAN K -7339596265				